RESEARCH ARTICLE

DOI: 10.34256/ irjt21s16

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# மாய யதார்த்தவாதப் படைப்புப் பார்வையில் நாகம் சிறுகதை

பா. உமாராணி [அ, *]

[அ] மொழிகள்துறை, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# The Short story of Nagam in the view of Magical Realism

**B. Umarani** [a, *]

[a] Department of Languages, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India

* Corresponding Author: skybirduma@gmail.com

Received: 08-01-2021
Revised: 09-05-2021
Accepted: 10-05-2021
Published: 11-05-2021

Check for updates

**ABSTRACT**

The various theories and theories and policies are emerging in the literary world. They help to approach literature with a new perspective and give them a new form. In that sense, it is conceivable that the theory of realism has succeeded in the endeavors in the realm of Tamil literature. It has a footprint and an impression in numerous artistic classifications like in many literary categories such as short stories, novels, poetry, drama, etc. In this way, the article inspects the utilization of the mystical realities in the short story "Nagam" to explain the contemporary issues.

**Keywords:** Magical Realism, Myths, Puranam, Symbolism

## முன்னுரை

இலக்கியம் என்பதை பல்வேறு சாத்தியப்பாடுகள் நிகழும் ஒரு களம் என்று குறிப்பிடலாம். ஒரு இலக்கியப் படைப்பைப் படைப்பாளன், அது சுட்டிக்காட்டும் புற உலகு, அது சென்றடையும் வாசகன் இவற்றை மையப்படுத்திப் பேசாது படைப்பு கூறும்பொருளை மட்டுமே மையப்படுத்தும் தன்மையை 'Objective Theory' எனக் குறிப்பிடுவர்.

"இலக்கிய வகையமைதியான புறவடிவம் பொருளில் தன் செல்வாக்கைச் செலுத்துவது. கொள்கலனின் வடிவத்தைப் பெறும் நீர்போல உள்ளடக்கம் இலக்கிய வகையின் உருவத்தில் தன்னைப் பொருத்திக் கொள்ளும்." (Murugarathinam et al., 1993) என்பதற்கிணங்க ஜெயமோகனின் "நாகம்" என்னும் சிறுகதைப் படைப்பு ஒரு பரந்துபட்ட மன உலகைப் படைத்துக்காட்டும் வலிமையுடையது. எனினும் மாய யதார்த்தங்களைப் படைப்பின் வழிப்புகுத்தி அதற்கு விரிந்த பொருளைச் சிறுகதை என்னும் சிறிய வடிவத்தினுள் செறிவாக்கிக் காட்டியுள்ளார்.

## மாய யதார்த்தவாதம்

தமிழ் இலக்கியத் களத்தில் யதார்த்தவாதம் (Realism), நவீனத்துவம் (Modernism), பின் நவீனத்துவம் (Post Modernism), மிகை கற்பனை (Fantasy), இருத்தலியம் (Existentialism), மாய யதார்த்தவாதம் (Magical Realism)

என பல்வேறு கோட்பாடுகள் காலூன்றி புதியதொரு படைப்புலகை எழுப்பியுள்ளது. அவ்வகையில் மாய யதார்த்தவாதம் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், ஓவியம் எனப் பல தளத்திலும் தன் படைப்புத் தளத்தை விரித்தள்ளது.

மாய யதார்த்தவாதம் என்பதை எளிமையாகக் புாிந்துகொள்ள வேண்டுமெனில் மாய நிகழ்வை யதார்த்தப் பாணியில் விரித்துச் செல்வது எனலாம். இங்கு மாய நிகழ்வுகள் நம்பகத் தன்மையற்றவை. யதார்த்தமோ தர்க்கரீதியானது. இவற்றின் கூட்டிணைவினால் கதைசொல்லியின் திறனில் மாய யதார்த்தம் உருக்கொள்கிறது.

நம்பமுடியாத ஒன்றை நம்பக்கூடியவற்றுடன் இணைத்து ஒரு மாயத்தோற்றத்தினை உருவாக்கித் தான் சொல்ல வந்த நிகழ்வுகளை மக்கள் மத்தியில் விளக்க இம்முறை படைப்பாளனுக்குப் பொிதும் உறுதுணையாக இருந்தது. 1920-களிலேயே ஜெர்மனி போன்ற நாடுகளில் முளைவிட்டிருந்தாலும் இவ்விலக்கியப் போக்கு லத்தீன் அமெரிக்காவுடனே அதிகம் இணைத்துப் பார்க்கப்படுகிறது. முதல் உலகப் போருக்குப் பின்னான பொருளாதார நெருக்கடி, நிலையற்ற சூழல், நிராசை, அவநம்பிக்கை மற்றும் நாட்டில் தோன்றிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், அதிகாரத்தின் எதிர்குரலாகவும் செயலாற்ற மாய யதார்த்தத் தன்மை படைப்பாளனுக்குத் துணைநின்றது. 1967-இல் கார்சியா மார்க்யூஸ் எழுதிய "ஒரு நூற்றாண்டுத் தனிமை" (One Hundred Years of Solitude) என்ற நாவல் மாய யதார்த்தவாகப் படைப்பாக முன்னிருத்தப்படுகிறது.

மாய யதார்த்தவாதம் அறிவுப்பூர்வமான சிந்தனை மரபுகளை அதற்கு எதிரான சிந்தனை மரபுகளுடன் ஒன்றிணைக்கும் செயலாக அமைகிறது என்பர். இத்தன்மை சமூக, சமய, கலாச்சார, பூகோள எல்லைகளைத் தகர்த்துவிடுவதுடன் அதிகாரத்துக்கு எதிரான தன் குரலையும் பதிவுசெய்ய உதவுகிறது. இம்மாய யதார்த்தம் படைப்புகளில் நிகழ உறுதுணைபுரியும் காரணிகளாக,

- ❖ சாத்தியமற்றதையும், சாத்தியமானதையும் இணைத்தல்
- ❖ கால, நில எல்லைகளைத் தகர்த்தல்
- ❖ மையமான கலாச்சாரத்தை எதிர்த்தல்
- ❖ பரந்துபட்ட பார்வை
- ❖ வரலாற்றுப் பார்வையை மறுத்தல்
- ❖ காரணகாரியம் மறுக்கப்படுதல் (தர்க்கரீதியை எதிர்த்தல்)
- ❖ விளிம்புநிலை மக்களுடன் தொடர்புடையதாயிருத்தல் (பா. ராகவன், மாந்திரீக யதார்த்தவாதம், (சுருக்கப்பட்டுள்ளது) விஷ்ணுபுரம் பற்றி, கீற்று - 2015)

என ஒருவாறு வரையறைப்படுத்தலாம். எனினும்,

- ❖ யதார்த்த அமைப்பு
- ❖ வரையறுக்கப்பட்ட தகவல்கள்
- ❖ சமூகம், அரசியல் இன்னும் பிற அதிகார அடுக்குகளையும் விமர்சனம் செய்தல்
- ❖ தனிப்பட்ட கதைக்களத்தைக் கட்டமைத்தல்
- ❖ உருவங்கள் மூலம் கருத்துக்களை முன்வைத்தல்
- ❖ அற்புதக் கூறுகளை உருவாக்குதல்

- மாயத்தை யதார்த்தமாகக் கூறுதல்
- நாட்டுப்புறக் கதைகள், கட்டுக்கதை, குலமரபுச் சின்ன வழிபாடு, நம்பிக்கை, தொன்மம், புராணக் கதைகள் போன்றவற்றை பயன்படுத்தல்

போன்ற காரணிகளும் மாய யதார்த்தப் போக்குகளில் இடம்பெறுகின்றன. இத்தகு கூறுகளில் ஒன்றோ பலவோ இணைந்து மாய யதார்த்தப் படைப்புகள் படைக்கப்படும் போது அது சமூகம் நோக்கிய படைப்பாக நகர்ந்து புதியதொரு படைப்புத்தளத்தை உருவாக்கிவிடுகிறது.

## "நாகம்" சிறுகதை சுட்டும் மாய யதார்த்தம்

ஒரு நாட்டின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும் அந்நாட்டு மக்களின் நம்பிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சமூகப் பின்புலம் மக்கள் மனதில் ஏற்படுத்தும் தாக்கமே இதற்குக் காரணமாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சமூகப் பின்புலம் வெளிப்படைப் பொருளாகப் பேசப்பட்டது. ஆனால் நவீன இலக்கிய உலகில் படைப்பின் மூலப்பொருளை அது உயிரோ, பொருளோ, காட்சியோ, நிகழ்ச்சியோ, பண்போ, சூழலோ எதுவாயினும் அதனை அடையாளம் காணக்கூடிய வகையில் பிரதிபலிக்காமல்; தான் அதை உணர்ந்த விதம், அல்லது தன்னை பாதித்தவிதம் அல்லது அது பற்றிய தன் கனவு, எதிர்பார்ப்பு, திறனாய்வு முதலியவற்றைப் படைப்பில் வெளிப்படுத்த படைப்பாளன் முனைகிறான். இந்நிலையில் படைப்பு செறிவுபட்டு நுண்மை வெளிப்பாட்டு நிலையை (Abstract Expressionism) அடைகிறது. அத்தகு ஒரு செறிவுநிலைத் தன்மையுடன் "நாகம்" சிறுகதை அமைந்துள்ளது. நாகம் இங்கு ஒரு குறியீட்டு நிலையில் படைக்கப்பட்டுள்ளது.

மனதின் ஆழ் நிலைகளைப் புலப்படுத்த முடியாமல் போகும்போது அங்கு குறியீடு மிகப்பெரியளவில் செயலாற்றத் தொடங்குகிறது. "படிமங்களில், குறியீடுகளில் ஒருவன் சொல்லக் கருதும் செய்திகள் மறைந்திருக்கின்றன. சொற்களும், சைகைகளும் கூடப் படிமக் கூறியீடுகளின் புற வருணனைகளே. அதனால்தான் மனிதன் குறியீடுகளால் சிந்திக்கும் விலங்கு எனக் குறிப்பிடப்படுகிறான். கற்பனையின் ஆற்றல் மிக்க ஒரு கிளை மொழிதான் குறியீடு. இது மனிதனைக் கால இடங்களைத் தாண்டி அழைத்தேகிக் காட்சி வழியே கருத்துக்களைத் தருகிறது" என்ற டாக்டர் ம. வீ. பச்சையப்பனின் கருத்து உற்றுநோக்கத்தக்கது (Pachaiyappan, 1992).

குறியீடுகள் மனதின் அந்தரங்கத்தின் ஆழந்த பகுதிகளைத் தோண்டியெடுத்து வெளிப்படுத்த உதவுகிறது. குறியீடுகளின் நுண்ணுருவமே மொழியாக இருப்பதினால் தான் சொல்லவேண்டிய செய்தியினை உணர்த்த புலக்காட்சியாய் "நாகத்தினை" கொணர்ந்திருக்கிறார் ஜெயமோகன். கால, நில எல்லைகளைக் கடப்பதற்கு இங்கு நட்டுப்புற மக்களின் வழிபாட்டை குறியீடாக்குவது படைப்புக்கு ஏற்றதாக அமைந்துவிடுகிறது.

## நாகம் - கதைக்கரு

ஜெயமோகனின் "நாகம்" என்னும் சிறுகதை கேரளம் மற்றும் அதன் எல்லையோரப் பகுதிகளில் வாழும் புள்ளுவர் இன மக்களின் வாழ்வியலையும், கால மாற்றத்தால் சிதைந்துபோன அவர்களின் பண்பாட்டுச் சூழல் மற்றும் பொருளாதார நிலையையும் விவரிக்கின்றது. ஒடுக்கப்பட்ட மக்களினமாக இருக்கும் இவர்களின் வாழ்வில் அதிகாரமும், அது சார்ந்த உடலரசியலும், அதனால் அடையும் இழிநிலையை மற்றும் சிதைவுபடும் சுயத்தையும் மையமாகக் கொண்டுள்ளது இக்கதை.

புள்ளுவர் இனத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை உயர்சாதி நாகம் (அதிகாரக் குறியீடு) தன்னுடைய காமயிச்சைக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் இம்மக்கள் அதற்கான எதிர்குரலைக் கூட எழுப்பமுடியாத அவல நிலையில் வாழ்ந்துவருவதை இக்கதை பதிவு செய்துள்ளது. பழைய பண்பாட்டின் தொடர்ச்சியாக இருந்த "புள்ளுவன் பாட்டும்" (நாகப்பாட்டு) அது தொடர்பான வழிபாடுகளும் காலமாற்றத்தால் வழக்கொழிய ஆரம்பிக்கின்றன. இதனால் பொருளாதாரத்தில் நலிவு ஏற்பட, ஒடுக்கப்பட்ட நிலையில் இருக்கும் இவர்களை தங்களின் உடல்பசிக்கு இரையாக்கும் அதிகாரவர்க்கத்தின் செயல்பாடுகள் தொடருகின்றன. இதனை மாற்ற நினைத்தாலும் காலங்காலமாக அதிகாரவர்க்கத்தினரை தங்களை வாழ்விக்கும் கடவுளர்களாக பாவிக்கும் இம்மக்களின் அறியாமைக்கு முன்னால் அவை வலுவிழந்து போகின்றன. எனினும் தான் உடல் தேவைக்கான ஒரு பொருள் மட்டுமே தங்களுக்கு சமூக அங்கீகாரம் கிடையாது என தங்களின் கீழ்மை நிலையை உணரும்போது அவர்கள் அடையும் மன வேதனையுமாக கதை நகர்கிறது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் எதார்த்த வாழ்வியலை இக்கதை மையமாகக் கொண்டு இயங்குகிறது. யதார்த்தவாதக் கலைஞர்கள் சமூகம் புறவயமாக இருப்பதைக் காண்கின்றனர் (Objectivity of Society). அது மாறுகிறது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றனர். புறவயமான சமூகத்தை அப்படியே அவர்கள் பிரதிபலிப்பது இல்லை. அதன் முரண்பாடுகளைக் கண்டு அவற்றை ஆய்விற்குட்படுத்தியே இலக்கியப்படைப்பில் பிரதிபலிக்கின்றனர்" (எஸ், தோதாத்ரி, பாரதியும் யதார்த்தவாதமும், ப.3) என்று யதார்த்தவாதம் என்பதற்கான ஒரு எளிமையான வரையறையை முன்வைக்கிறார் எஸ். தோதாத்ரி. எந்தவொரு இலக்கியப்படைப்பையும் உள்ளதை உள்ளபடியே படைத்துவிட இயலாது. நடப்பியலோடு புனைவும் சேர்த்து மொழியப்படும் போதுதான் அதுவொரு இலக்கியத் தன்மையைத் தன்மேல் ஏற்றிக்கொள்கிறது. அவ்வகையில் என்று "நாகம்" என்ற சிறுகதையும் குறிப்பிட்ட சமூகம் சார்ந்த வாழ்வியல் சிக்கலை மாயத் தன்மையில் குறியீடாக்கிப் படைக்கப்பட்டுள்ளது.

## கதைக்குத் தேவையான அற்புத உணர்வு

மாய யதார்த்தக் கதை நகர்வுகள் எப்போதும் ஒருவித அற்புத உணர்வை யதார்த்தத் தன்மையுடன் படைத்துக்காட்ட வேண்டும். "நாகம்" சிறுகதையில் நாகம் அதனோடு கலவியில் ஈடுபடும் பெண் என ஒரு அற்புதக்கூறைச் சுட்டினாலும் அதனை யதார்த்தத் தன்மையுடன் இயல்பு மாறாமல் மொழிகிறார் ஜெயமோகன். நாகம் குறித்த வருணனையினைச் செய்யும்போது அதன் புழுத்தன்மை பற்றிப் பேசும் ஆசிரியர், அது உமிழும் மாணிக்கக் கல்லில் இருந்து தோன்றும் ஒளியின் பின்னணியில்,

"அது ஒரு விளக்கு போலவும், நீலக்கல் போலவும் ஒரே சமயம் தொ◌ிந்தது. நீலநிற ஜ்வாலையில் மூழ்கி சுவர்களும், கூரையும், தரையும் கொடித்துணிகளும், அடுக்குப் பானைகளும் உறிகளும் எல்லாம் நீல நிறத்தில் தெரிய ஆரம்பித்தன. உடம்பு குளிர்ந்து விரைத்திருக்க, ஒரு பொ◌ிய நீர்ப்படுகையின் அடியில் தான் மல்லாந்திருப்பதாகப்பட்டது அவளுக்கு. நீலத்திரவத்தினுள் மூழ்கி துவண்டுததும்பும் கூரை, சுவர்கள், களம். அவள் உடம்பின் வளைவுகள் கூட நீல அலையின் உறைவு போல ஆயின. அவளை தழுவி இறுக்கிய கா◌ிய உடல் அவ்வொளியில் முற்றிலும் கரைந்துபோய்விட்டிருந்தது. அவளால் அதை அள்ள முடிந்தது. தழுவ முடிந்தது. பா◌ா◌்க்க முடியவில்லை. மெல்ல அவளை அவ்வுடல் ஏந்த அந்தரத்தில் தூக்கியது. நீல ஒளியின் ஓர் அலை அவளை கீழிருந்து அறைந்து தெறிக்கச் செய்தது. நுரைத்துக் கொந்தளிக்கும் ஓர் அருவி அவளுக்குள் புகுந்தது. எண்ணங்களும் பிரமைகளும் சிதறி அவள் நீலம் மட்டுமாக எஞ்சினாள். தடையின்றி நீலத்தில் மிதக்க ஆரம்பித்தாள். கூரை இல்லை. வானம் இல்லை. எல்லை விளிம்பில் ஒரு கணநேரம்

முன்னும் பின்னும் தத்தளிப்பு. பின்பு அதிராட்சத விரல் ஒன்றினால் சுண்டப்பட்ட புழுபொல நீலப்பிரவாகத்தில் முடிவின்றி விசிறப்பட்டாள்." என அற்புதத் தோற்றத்தை உருவாக்கிக் காட்டுகிறார். இங்கு அற்புதப் புனைவு கதையினை அடுத்தகட்ட நகர்விற்கு இட்டுச் செல்கிறது. கதைபேசும் மையப் பொருண்மையை நோக்கி நகர்ந்து ஒடுக்கப்பட்ட ஒரு பெண்ணின் ஒரு மனக் குரலாகத் தோற்றம் கொள்வதைக் காணமுடிகிறது.

## நிஜ உலகைக் கட்டமைத்தல் (யதார்த்த அமைப்பு)

'நாகம்" சிறுகதை மாய யதார்த்த பாணியில் அமைந்த கதையெனினும் அதன் மொழிதல் தன்மையில் ஒரு யதார்த்த உலகைக் கட்டமைத்துக் காட்டகிறது. அகவயமான ஒரு மொழிநடையைக் கைகொள்ளாமல் கறாரான புறவயமான நடையைக் கையாளுவதால் கதை நம்பும்படியான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இங்கு மொழி ஒரு சிக்கலற்ற தன்மையை மேற்கொள்ளுவதாலும், கதை நிகழ்விற்கான உண்மைத் தன்மைகளைக் களப் பின்னணியோடு பொருத்தமுற மொழிவதினாலும் நம்பும்படியான தோற்றத்தை உருவாக்கிவிடுகிறது.

"நான் கொடையொண்ணும் பாக்கி வச்சேல்ல என்று அவள் தலைகுனிந்தபடி சொன்னாள். குற்றம் ஒளித்த பாவனையில் கைநகங்களைப் பார்த்தாள். நாகம் நாபறக்க சட்டென்று திரும்பியது. மூளையில் புழுதிப் படலத்தால் போர்வையிடப்பட்ட புள்ளோர்க் குடம் தூங்கியதை பார்த்துவிட்டு அவள் கண்களைச் சந்தித்தது. அவள் வயிற்றுக்குள் புள்ளோர்க் குடத்தின் விம்மல் ஒருமுறை அதிர்ந்தது. குளிர்க்காற்று உடைகளுக்குள் புகுந்து நடுங்க வைத்தது. பதறிய குரலில், "நாகபாட்டுக்கு இப்பம் ஆரும் விளிச்சியதில்ல. பாடிக் கேக்கவும் ஆரும் வாறதில்ல. அப்பன் போனதுக்க பிறகு...." என்றாள்." என்றும், "விளக்கின் மங்கல ஒளியில் நாகத்தின் நிழல் பிரம்மாண்டமாக அவள் மீதும், அறை முழுக்கவும் பரவி நின்று மெல்ல ஆடியது அந்த ஒலியல்ல, ஏதோ பழைய நினைவின் அதிர்வுதான் அது என்று பட்டது. கைகள் செயலற்று நின்றன. நாகப் பாட்டின் ஒரு வரிகூட நினைவு வரவில்லை" என்று பாம்பு குறித்த வருணனையிலும் புள்ளுவன் பாட்டுக்கான (நாகப்பாட்டு) செய்திளைக்கூறும் போது ஒரு இனத்து மக்களின் நம்பிக்கையாக அது தோற்றம் கொள்கிறது. நாகம் குறித்தான பதிவுகள் கதையின் ஒருவித மாயத்தை நிஜத்தன்மையிலேயே கட்டமைத்துக்காட்டுகிறது.

## கதைக்கான களக்கட்டமைப்பு

ஒரு படைப்பின் வெற்றி அதன் கருவை வெளிப்படுத்தும் களத்தையே மையமாகக் கொண்டுள்ளது எனலாம். கதைக் கருவுக்கும், கதை நிகழும் களத்துக்கும் ஒரு ஒத்திணைவு இருக்கவேண்டும். நாகம் சிறுகதை கேரளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களின் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டள்ள ஒரு படைப்பு. கேரளப் பகுதிசார்ந்து வாழும் புள்ளுவர் இனத்தவர்களின் பண்பாடு, அவர்களின் நம்பிக்கை, புள்ளோர்குடம் அமைத்து புள்ளுவன் பாட்டு இசைக்கும் முறை, நாக பாம்புகள் சார்ந்த அம்மக்களின் நம்பிக்கை, வழிபாட்டுமுறை, அவர்களின் வாழ்வியல்புலம் என பல் அடுக்குத்தன்மை கொண்டதாய் பின்னணி அமைக்கப்பட்டு அதில் கதையை நகர்த்திச் செல்கின்றார் ஜெயமோகன் (Jayamohan, 1999).

ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்கின்ற புள்ளுவர் இன மக்கள், அம்மண்ணில் உயர்குடிச் சாதியினரால் அதிகாரத்துக்கு உட்படுத்தப்படுவதை கதைக்களமாகக் கொண்டுள்ளது இக்கதை. அதிகார

அடக்குமுறையினால் உயர்சாதி அல்லாத மக்கள் பொருளாதார அடிப்படையிலும், உடல் ரீதியாகவும் சுரண்டப்படுவதையும், ஒடுக்கப்படுவதையும் இக்கதை மையமாகக் கொண்டுள்ளது.

"விளக்கின் மங்கல ஒளியில் நாகத்தின் நிழல் பிரம்மாண்டமாக அவள் மீதும், அறை முழுக்கவும் பரவி நின்று மெல்ல ஆடியது. பின் அடங்கியது. அவள் நடுநடுவே நாகத்தைப் பார்த்தபடி வாறுகடைகளை இழுத்தாள். தாளக்கட்டைகளை செருகி, தோற்பரப்பை இறுக்கினாள். விரலால் மெல்லத் தொட்டபோது அது "இம்ம்ம்" என்று அதிர்வடைந்தது. அவள் உடல் திடுக்கிட்டுப் பதறியது. மூச்சு வாங்கியது. குடவளைவை தொடைகளின் நடுவே பொருத்தியபடி அமர்ந்தாள். இருமுறை மீட்டினாள். அந்த ஒலியல்ல, ஏதோ பழைய நினைவின் அதிர்வுதான் அது என்று பட்டது. கைகள் செயலற்று நின்றன. நாகப் பாட்டின் ஒரு வரிகூட நினைவு வரவில்லை

"ஆயிரம் தலையுள்ள ஆதிசேஷன்

ஆயில்யம் திருநாளில் ஜனிச்சோனல்லோ"

நாகம் மெல்ல தலையசைத்தது. அதன் உடம்பு முழுக்க அசைவுகள் உருண்டு சென்றன. அதன் நிழில் நீண்டது மடங்கியது. சட்டென்று துடித்தாடியது. அவள் குரலில் அதிர்வுகள் முழங்கி நிமிர, அறைக்குள் செஞ்சுடரொளியும், நிழல்களும் அசைந்தன" என ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கைகளை மையமாகக் கொண்டே தனித்த இக்கதைக் களத்தைத் தேர்வுசெய்துள்ளார் ஜெயமோகன். அதிகாரம் மெல்ல மெல்லப் படர்ந்து மீளமுடியாத ஒரு அவலத்தைத் தோற்றுவிக்கும் தன்மையை புள்ளுவன்பாட்டின் தேர்வினாலும், அதன் மையமாக உள்ள நாகத்தைப் படைத்துக்காட்டுவதினாலும் வெளிப்படுத்தியுள்ளார்.

## வரையறுக்கப்பட்ட தகவல்கள்

மாய யதார்த்தப் போக்கில் அமையும் கதைகளின் சிறப்புகளில் ஒன்று அவை மாயப் புனைவை அடிப்படைக் கூறாகக் கொண்டிருந்தாலும் அவற்றில் வரையறுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டிருக்கும் என்பதே. மாயம் புனைவை யதார்த்தப்படுத்தும் முயற்சியில் சமூகம், அரசியல், கலாச்சாரம், புராணம், தொன்மம், சமயம் உள்ளிட்ட நம்பிக்கைகளை விமர்சனத்துக்கு உள்ளாக்குகிறது. "நாகம்" சிறுகதையும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலில் பழமரபுச் சிந்தனைகள் வேரூன்றி வளர்ந்து இன்னும் அவர்களை மீளமுடியாத் துயரிலேயே தள்ளிவைத்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

புள்ளுவன் பாட்டு எனப்படும் நாகப்பாட்டினைப் பாடும் ஒரு சமூகத்தினராக புள்ளுவர்கள் கேரளம் மற்றும் அதன் எல்லையோரப்பகுதியில் வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் கோவில்களிலும், உயர்சாதியினரின் வீடுகளிலும் களம் எழுதி, புள்ளோர்க்குடம் இசைத்துப் பாடும் தன்மை உடையவர்கள். பாம்பு தொடர்பான அதிக நம்பிக்கைகளைக் கொண்டுள்ள கேரளமக்கள், தங்கள் வீடுகளில் பாம்புகளுக்கென தனி வழிபடு இடங்களை வைத்திருப்பர். பாம்புகள் மீதான இவர்கள் நம்பிக்கை காலங்காலமாகத் தொடர்ந்து வருகின்ற நிலையில் தங்களின் குடும்ப விருத்திக்கென புள்ளுவர்களை அழைத்து களமெழுதி பாட்டிசைத்து இறைவனை வரவழைக்கும் ஒரு பழக்கம் அங்கு உள்ளது. இதற்கென தனியாக பரந்துபட்ட பகுதியில் வண்ணப் பொடிகளால் இறைவியின் திருவுருவை வரைந்து அதில் புள்ளோர் குடம், தாளக்கட்டைகள் போன்ற இசைக்கருவிகளை இசைத்துப் பாடத்தொடங்குவர். வேண்டுதலில் புள்ளுவத்தி அல்லது அங்குள்ள அக்குடும்ப உறுப்பினர்களின் மேல் தெய்வம் ஏறி செய்ய வேண்டிய பரிகாரங்களைச் சொல்வது வழக்கம். இறைவன் அங்கு

உருக்கொள்ளவில்லையெனில் அதனைத் தெய்வக்குற்றம் எனக்கருதி பின்வரும் நாட்களிலும் வழிபாட்டை நீட்டிப்பர்.

வழிபாட்டின் இறுதியில் இப்புள்ளுவர் இன மக்கள் கூலியாகப் பெறுவது தேங்காய், பழம், நெல் போன்ற தானியங்களையும், கொடைகளையும் மட்டுமே. இத்தகு நிலையில் இம்மக்கள் பொருளாதாரத்திற்கு உயர்சாதியினரைச் சார்ந்தும், அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டும் வசதியற்றவர்களாக வாழ்ந்துவருவதைக் காணமுடிகிறது. இம்மக்களின் ஒடுக்கப்பட்ட சூழலை ஒரு பெண்ணின் அகமனக் குமறலாக, பாலியல் ஒடுக்குதலுக்கு ஆட்பட்ட கீழ்மையை உணர்தலாக, "நாகம் "உஸ்ஸ் "என்ற மூச்சு விட்டது. பத்தியை மீண்டும் சுருக்கியபோது அதன் முகத்தின் தீவிரம் மறைந்தது. ஒரு புழுத்தன்மை குடியேறியது. அவளுக்குள் முதல்முறையாக அருவருப்பு எழுந்து தொண்டையை அடைத்து. அத்தனை உக்கிரத்தின் அடுக்குகளுக்கும் கீழே, உண்மையில் அது ஒரு புழுதான் என்ற எண்ணம் எழுந்தது. விஷம் நிரம்பிய புழு - அவ்வளவுதான். குமட்டுவது போல அவளுக்கு உடம்பு உலுக்கியது" என்பன போன்ற காட்சிப்படுத்தல்கள் வழி ஒரு கராரான புறநடையில் செய்திகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## "நாகம்" படைப்பும் - குறியீடும்

ஆதிகாலம் தொட்டே மக்களின் நம்பிக்கைசார் வழிபாட்டில் "பாம்புகள்" இடம்பெற்றிருக்கின்றன. நாட்டுப்புற நம்பிக்கைசார் வழிபாடுகளிலும், புராணங்கள், தொன்மங்கள், சமயம் என அனைத்து நிலைகளிலும் பாம்புகள் வணக்கத்துக்குரிய ஒன்றாகவே இடம்பெற்றுள்ளது. இந்திய வழிபாட்டு மரபிலும் சிவன், திருமால், மாரியம்மன் போன்ற பெருந்தெய்வ மற்றும் சிறுதெய்வ வழிபாட்டிலும் பாம்புகள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

நாகவழிபாடு பெரும்பாலும் பெண்தெய்வ வழிபாட்டோடு தொடர்புடையதாகவே இருக்கின்றது. பொதுவாக ஆண்மை மற்றும் காமத்தின் குறியீடாக நாகம் அடையாளப்படுத்தப்படுகிறது. அதிகாரத்தையும், காமத்தையும் குறியீடாக்கி இங்கு "நாகம்" சிறுகதை புனையப்பட்டுள்ளதை,

"நாகத்தின் மீது கைகளால் மேலும் அழுத்தமாக வருட ஆரம்பித்தாள். அதனுள் எலும்புகள் அசைந்தன. மீண்டும் அக்கண்களைப் பார்த்தாள். அவற்றில் மாறான ஒன்று இருந்தது. விஷமும், தாபமும், ஆணவம் மிக்க உருளலும் மட்டுமல்ல. வெறுப்பு வழியோரங்களை சுருக்கி அதிரவைக்கும் குரோதம். குரோதமா? அவளுக்குள் ஆதரவின்மையும், சுயபரிதாபமும் ஏற்பட்டது. அதன் உடம்பின் கருமை அவளை முழுக்க விழுங்கியது போல தலையும் பாதங்களும் மட்டும் மிஞ்சின. ஒற்றைக் கரத்தால் அவளை நொறுக்க விரும்பியபோல அவள் தோளிலும் விலாவிலும் அழுத்தம் தெறித்து, எலும்புகள் உரசி இறுகின. வலி உச்சந்தலையை மோதியது. சில கணங்களுக்குள் உறுப்புறுப்பாகச் சிதறிக் கிடப்பவள்போல நூறு நூறு காட்டு விலங்குகள் நக்கி நக்கி நீர் அருந்தும் காட்டுத் தடாகம் போலத் தன்னை உணர்ந்தாள். ஆணவம் திமிறிய அந்த தலைதிருப்பல்கள் அவளுள் தாங்க முடியாத மன நெகிழ்ச்சியை உருவாக்கின. அவள் அழ ஆரம்பித்தாள்." என்னும் பகுதிகள் புலப்படுத்திவிடுகின்றன.

படைப்பாளனின் பிரக்ஞைக்குள் செயலாற்றும் போது இக்குறியீடு மாய நிகழ்வுளோடு தொடர்புடைய நம்பமுடியாத நிகழ்வாக இருப்பினும் அதற்கு யதார்த்தமான புறநடையைக் கொடுத்துவிடுகின்றது. நாகம் அதிகாரத்தின் குறியீடாக இருப்பதையும், உடல் (காமம்) அதிகாரம் செலுத்தப்படும் கருவியாக இருப்பதையும் மொழிகிறபோது கதையின் மையப்பிரச்சினை மேலெழுந்து தோன்றத் தொடங்கிவிடுகிறது. மாயத்தன்மையின் தோற்றம் மறைந்து நிலப்பிபுத்துவ அதிகாரமும்,

சிறுதெய்வ வழிபாடும், அதுசார்ந்த நம்பிக்கையின் ஊடாக ஒடுக்கப்பட்ட மக்களின் வேதனையுமாக உருக்கொள்கிறது.

"இலக்கியம் எப்போது மரபின் தொடர்ச்சியாக மட்டும் நீள்கிறதோ, அப்போது அது தன் உயிர்த்துடிப்பை இழக்கிறது. மரபின் நிழலில் ஒதுங்குவது ஒருவகையில் படைப்பு நெறிக்கு முரனானதும் கூட. இங்கு படைப்பு என்ற சொல்லே பொருள் இழக்கிறது" (Vethasagaya Kumar, 1995) என்ற டாக்டர் எம். வேதசகாயகுமாரின் கூற்றினை உறுதிப்படுத்தும் விதமாக, மரபு அறிமுகம் செய்த வடிவத்தைப் பிரதி செய்வதில் கவனம் கொள்ளாமல் மரபின் வழி புதியதொரு பரிமாணத்தைக் கண்டடைய விழைகிறார் ஜெயமோகன். இத்தகு பார்வையே இவருடைய எழுத்துக்குப் பன்முகத் தன்மையைக் கொண்டு சேர்க்கிறது.

## முடிவுரை

ஒரு ஆரோக்கியமான இலக்கிய மரபு தொடர்ந்து மாற்றங்களைக் கொண்டிருக்கும். அதனால்தான் படைப்பாளனுக்கும், காலத்திற்குமான போராட்டம் தொடர் நிகழ்வாக எழுத்துக்களில் பரிணமிக்கிறது. ஒரு புள்ளியில் மாயச் சித்திரிப்பு யதார்த்தத் தன்மையோடு இணைவு கண்டு அற்புதமான ஆழங்களுக்கு இவருடைய கதை இட்டுச்செல்கின்றது. நாகத்தை வதைக்க இயலாத நிலையில் தன்னைத் தானே வதைத்துக் கொள்ளும் வன்முறைக்கான ஆதாரகுணம் எங்கு மையம் கொள்கிறது என்பதை ஆழச்சென்று காணுகின்றார். அதற்கான உள்நோக்கிய தேடலாகப் படைப்பு ஒளிபெறுகின்றது. முழுமையும் மன உணர்வுகளின் தொடர்பற்ற பதிவுகளாகி விடாமல் அகத்திற்கும் புறத்திற்குமான ஒரு தேடலாகப் படைப்பு நிலைகொள்கிறது. ஒரு வகையில் இயல்பான குணங்களை மறைத்துக் கொண்டு வெளிவேடமே இயல்பென தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் மன உலகை இக்கதை முன்வைக்கிறது. பாலுணர்ச்சி, சமயம், சமூகம் என எல்லா நிலைகளிலும் போலிமை குடியேறியதன் விளைவாக அது மனிதனின் ஆதார குணங்களை நசுக்கித் தன்னை இயல்பிற்கு மாறாக நிலைநிறுத்திக்கொள்ள விழைகிறது. யதார்த்தம், மாயம் என்பவை நிகழ்ச்சிச் சித்திரிப்பின் பின் அல்ல. அதை வாழ்வு சார்ந்த படைப்பாக மாற்றமுயல்கின்ற படைப்பாளனின் பார்வையில்தான் அமைந்துள்ளது என்பதை இவரது "நாகம்" சிறுகதை அழுத்தமாக உணர்த்திவிடுகின்றது. இப்படைப்பு சித்திரிக்கும் நிகழ்ச்சியிலும், அதற்குப் பயன்படுத்தும் மொழியிலுமாக ஒருவித அபத்தநிலை காணப்படுகிறது எனினும் அது படைப்பை அடுத்த நிலைக்குக் கடத்திவிடுவதில் உறுதுணைபுரியும் பாடைப்புசார் அழகியலையும் உணரமுடிகிறது. வாழ்வின் நெருக்கடிகளை அதன் எல்லா நிலைகளிலும் எதிர்கொள்வதுடன் அதையே மனித விடுதலைக்கான வழியாகவும் காட்ட முனைகிறார். சர்வாதிகாரம், வர்க்கரீதியான அடிமைத்தனம், பாலினம் என அனைத்து கீழ்மைகளில் இருந்தும் விடுதலையை உணரமுனையும் அகநோக்கிய தேடலில் படைப்பு நகர்கிறது. ஒற்றைப் பரிமாணம் கொண்ட தட்டை எழுத்துக்களில் மிகையாகச் சித்திரித்து வாழ்வை கோட்பாடு சார்ந்த சிந்தனைகளில் அடக்கிவிடாமல் அதன் சிக்கலை முழுப் பரிமாணத்துடன் மொழிகின்றார் ஜெயமோகன்.

## பார்வை நூல்கள்

Jayamohan, (1999), 1000 pillar hall, Agaram Veliyedu, Kumbakonam, Tamil Nadu, India

Murugarathinam, T., Kanagasababathi, C., THirumalai, M., (1993), Short Story Literature in the Eighties, Madurai Kamaraj University, Department of Tamil, Madurai, India

Pachaiyappan, M.V., (1992) Moovendar Pathipagam, Chennai, India

Vethasagaya Kumar, M., (1995) Contemporary Literature Reading View, Sakthi Press, Nagarcoil, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License